வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 19 of 2023

வழக்கு சாட்சி – PW 4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.முத்துகுமாரசாமி | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | அப்பாசாமி | தொழில் | : | துணி வியாபாரம் |
| கிராமம் | : | ஆறுமுத்தம்பாளையம் | சமயம் | : | |
| தாலுக்கா | : | பல்லடம் | வயது | : | 58 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 13.03.2024.

(1, 2 எதிரிகள் ஆஜர்).

முதல் விசாரணை: நாள்: 13.03.2024

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துக் கொண்டு துணி வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 23.07.2022 ஆம் தேதி காலை 8.00 மணியளவில் நானும், எனது நண்பர் பாலகிருஷ்ணனும் சின்னக்கரை பஸ் ஸ்டாப் ஆட்டோ ஸ்டாண்டு அருகில் சென்றுகொண்டிருந்தபோது பல்லடம் போலீசார் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது வெங்கடேஷ், மணிகண்டன், சூர்யா என்ற மூன்று நபர்கள் ஒரு இரு சக்கர வாகனத்தில் வந்தார்கள். போலீசார் அவர்களை பிடித்து விசாரித்தபோது அவர்கள் குற்ற வழக்கு சம்பத்தில் ஈடுபட்டு இருப்பதாக தெரியவந்ததால் அவர்களை கைது செய்து விசாரித்தபோது அவர்கள் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள்.

2. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அண்ணா நகர் மளிகை கடை அருகில் சரஸ்வதி என்ற பெண்ணிடம் நகையை பறித்துச் சென்றதாகவும், பின்னர் மாதப்பூர் கருப்புராயன்கோவில் அருகில் சென்ற ஒரு பெண்ணிடம் நகையை பறித்துச் சென்றதாகவும் 3 எதிரிகளும் தனித்தனியாக ஒப்புதல் வாக்குமூலங்கள் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்ங்களில் நானும், பாலகிருஷ்ணன் என்பவரும் சாட்சியாக சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில் அவர்கள் ஓட்டி வந்த இரு சக்கர வாகனத்தை கைப்பற்றுதல் மகஜரில்

கைப்பற்றினார்கள். பின்னிட்டு திருப்பூர் சென்று எதிரி அவரது வீட்டில் மறைத்து வைத்திருந்த செயினை எடுத்துக்கொடுத்தபோது போலீசார் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார்கள். அதற்கும் சாட்சியாக இருந்து சாட்சி கையொப்பம் செய்தேன். அவர்கள் மூன்று பேரையும் பார்த்து வெகு நாள்களாகிவிட்டதால் அவர்களை அடையாளம் தெரியாது.

3. எதிரி வெங்கடேஷ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **எதிரி வெங்கடேஷ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.3** ஆகும். எதிரி மணிகண்டன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **எதிரி மணிகண்டன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.4** ஆகும். தற்போதுஎன்னிடம் காட்டப்படும் இரு சக்கர வாகனத்தை கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.5** ஆகும். தற்போது என்னிடம் காட்டப்படும் சுமார் 5 பவுன் தங்க தாலி கொடியை கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.6** ஆகும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 ஆம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணை :</u>**

4. பாலகிருஷ்ணனை எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் 4, 5 வருடமாக தெரியும். பல்லடம்–திருப்பூர் ரோடு செல்லும் வழியில் உள்ள சின்னக்கரை பஸ் ஸ்டாப்பில் போலீசார் விசாரணை செய்தார்கள். நானும், பாலகிருஷ்ணனும் தனித்தனி இரு சக்கர வாகனத்தில் சென்றோம். அங்கு 3, 4 போலீசார் இருந்தார்கள். போலீசார் கணினி வைத்து தட்டச்சு செய்தார்களா என்றால் செய்தார்கள். அதை எங்கு வைத்து பிரிண்ட் எடுத்தார்கள் என்றால் குண்ணாங்கல்பாளையம் பிரிவில் உள்ள இ–சேவை மையத்தில் பிரிண்ட் எடுத்தார்கள். பிரிண்ட்அவுட் எடுத்தபோது மணி 9.30, 10.00 மணி இருக்கும்.

5. அதற்கு பின்னிட்டு திருப்பூரில் உள்ள எதிரி வெங்கடேசின் வீட்டிற்கு சென்றோமா என்றால் சென்றோம். சின்னக்கரை பேருந்து நிறுத்தத்திலிருந்து எதிரி

வெங்கடேஷ் வீட்டிற்கு யார் யார் எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் நான் செல்லவில்லை. நான் செல்லவில்லை என்பதால் அங்கு என்ன பொருள் கைப்பற்றினார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். என் முன்னிலையில் கைப்பற்றியதாக சொல்லியிருந்தால் அது தவறு ஆகும். எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் 4, 5 கையொப்பங்கள் செய்தேன். என் முன்னிலையில் நகைகள் கைப்பற்றினார்களா என்றால் இல்லை. என் முன்னிலையில் நகைகள் கைப்பற்றியதாக போலீசார் சொல்லியிருப்பது தவறு என்றால் சரிதான்.

(2 ஆம் எதிரி தரப்பில் 1 ஆம் எதிரியின் குறுக்கு விசாரணையை ஏற்புரை செய்வதாக எடுத்துரைத்தால் அவ்வாறே பதிவு செய்யப்படுகிறது).

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஓம்/–க.சித்ரா,
நீதித்துறை நடுவர்,
பல்லடம்.